[1978 பிப்ரவரி 28

திரு. கே. சௌந்திரராசன் : தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மழை, வெள்ளத்தின் விளைவாக நிலத்தடி நீர் வளம் பெருகியிருப்பதாகச் சொல்கிறார்கள். இதை அடிப்படையாக வைத்தாவது புதிதாக பம்ப் செட்களுக்கு மின்சாரம் வழங்கும் நிலை ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 35,000 பம்ப் செட்களுக்கு வழங்குவது என்று தீர்மானித்துள்ளோம். அவைகளைப் பொறுத்த வரையில் இந்த நிலத்தடி சான்றிதழ் தேவைப்படாது.

ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்

* 303 வினா—திரு. துரை முருகன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டம், லத்தேரிக்கருகில் ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனின், அத் திட்டம் எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) பரிசீலனை முடிந்த பிறகுதான் எப்பொழுது துவக்குவது என்பதற்கான முடிவு எடுக்க இயலும்.

திரு. துரை முருகன் : இந்த அணை கட்டுவதற்கு 1974-ல் அரசாங்கச் சார்பில் பொதுப்பணித்துறை சீஃப் என்ஜினீயர் அவர்கள் எல்லாம் அந்த இடத்திற்கு வந்து அது குறித்து ஆய்வு செய்து ரிப்போர்ட் கூடத் தயார் செய்திருந்தார்கள். அப்போது நான் காட்பாடி எம்.எல்.ஏ. ஆக இருந்தேன். அந்த ஆண்டே அதைத் துவக்குவதாக எனக்கு அறிவிக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஐந்து ஏரிகளுக்கு ஆண்டு முழுவதும் நீர் வருகிற ஒரு வாய்ப்பு இந்த அணைக்கட்டுத் திட்டத்தினால் ஏற்படும். கிட்டத்தட்ட 500 ஏக்கர் புன்செய் நிலங்கள் நன்செய்யாக மாற வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இதன் அத்தியாவசியத்தை உணர்ந்து உடனடியாக இந்த ஆண்டே அதைத் துவக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அறிவித்ததில் ஒன்றும் தவறு இல்லை. அதனால்தான் ஆய்வில் இருக்கிறது.

1978 பிப்ரவரி 28]

திரு. எம். ஏ. ஜெயவேலு: சில சேர்க்கக் கூடாத செலவினங்களை அதிகாரிகள் சேர்த்திருப்பதால் இந்தத் தாமதம் என்பதை அரசு உணருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 24 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயார் செய்திருக்கிருர்கள். அதன்மூலம் 504 ஏக்கர் நிரந்தர பாசன உறுதியும், 67 ஏக்கர் பாசன வசதியும் கிடைக்கும் என்று கூறப்பட்டு இருக்கிறது. 24 இலட்சம் ரூபாய் அளவு தேவையா என்பதுபற்றித்தான் ஆய்வு நடைபெற்று வருகிறது.

திரு. எம். ஏ. ஜெயவேலு: இந்த அணைக்கட்டிலிருந்து தாராப்படவேடு என்ற ஊருக்கு நீர் செல்லும்போது அந்த நீர் போகிற இடங்கள் எல்லாம் தற்போது வீட்டு மனைகளாக்கப் பட்டு விடுவதால் அந்த நீர் பூராவையும் இந்த ராஜா தோப்பு அணைக்கட்டில் தேக்கி வைப்பது உதவியாகயிருக்கும் என்று அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்திருக்கிற விவரம் இத் திட்டம் ஆய்வு செய்யும் போது எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. துரை முருகன்: காட்பாடி தாராப்படவேடு ஏரியில் இருந்து வருகிற நீர் பாயும் இடங்கள் கொஞ்சம் டவுன்ஷிப்பாக மாற்றப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்கள் தண்ணீர் வருகிற வாய்க்கால்கள் வீட்டு மனைகளாக மாற்றப்படவில்லை. ராஜா தோப்பு தண்ணீர் லத்தேரி, சிற்றேரி அன்னஸ்குடி ஏரி போன்றவற்றிற்குச் செல்லுகிறது. விருதம்பட்டு, காங்கேயநல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள புன்செய் நிலங்களும் நன்செய்யாக மாற வாய்ப்பிருக்கிறது. ஆகவே, செலவைப் பாராது—24 இலட்சம் ரூபாய் என்ன, 50 இலட்சம் ரூபாய் செலவானுலும் இந்த அணைக் கட்டுத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அட்சரம் இலட்சம் பெறும் என்று சொல்வார்கள். அதேபோல் உறுப்பினர் அவர்கள் வற்புறுத்துவார்களேயானுல் வேண்டுமானுல் நாம் அதைக் கருதலாம். உறுப்பினர்கள் இருவரும் ஒரே பகுதியிலிருந்து வருவதால் துரை முருகன் அவர்களும், திரு. ஜெயவேலு அவர்களும் இங்கு பரிமாறிக்கொண்ட விளக்கத்திற்கு நன்றி.